4. திரு. கே. கந்தசாமி
5. திரு. அ. சே. குமாரசாமி
6. திரு. மு. பழனிசாமி
7. திரு. க. பழனிவேலன்
8. திரு. ஆர். பொன்னப்ப நாடார்
9. திரு. தி. பொன்னுமலை
10. திரு. மணலி சி. கந்தசாமி
11. திரு. பி. எஸ். மணியன்
12. திரு. என். மாணிக்கம்
13. திரு. ஏ. ஆர். மாரிமுத்து
14. திரு. எம். ஏ. லத்தீப்
15. திரு. எஸ். வடிவேல்
16. திரு. பி. வெங்கடசாமி

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால், 1974–75-ம் ஆண்டு பொதுக் கணக்காய்வுக் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டதாக நான் அறிவிக்கிறேன்.

மாண்புமிகு நிதி அமைச்சர் (முதல் அமைச்சர்) அவர்களும், மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் அவர்களும் தங்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்களாவர்.

இப்பேரவையின் 174-வது விதியின் கீழ் திரு. எம். ஏ. லத்தீப் அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமனம் செய்கிறேன்.

மதிப்பீட்டுக் குழுவிற்குத் தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1974–75-ஆம் ஆண்டுக்கான மதிப்பீட்டுக் குழுவிற்குத் தமிழ்நாடு சட்டப் பேரவையின் பதினாறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் பொருட்டு கீழ்க்கண்ட பதினாறு உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப் பட்டுள்ளனர் என்பதை நான் பேரவைக்கு அறிவிக்கிறேன்.